செ.வெ.எண் : 101/2021 நாள் : 28.02.2021

கன்னியாகுமரி மாவட்டம், 189 அய்யா வைகுண்டசாமி பிறந்த நாள் விழா முன்னிட்டு 04.03.2021 (வியாழன் கிழமை) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**(2)** 04.03.2021 அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2021 மார்ச் திங்கள் நான்காவது சனிக்கிழமை (27.03.2021) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(3)** கன்னியாகுமரி மாவட்டத்திற்கு அய்யா வைகுண்டசாமி பிறந்த நாள் விழாவிற்கு உள்ளூர் விடுமுறை செலவாணி முறிச் சட்டம் 1881(Under Negotiable Instruments Act 1881)ன் படி அறிவிக்கப்படவில்லை என்பதால் 04.03.2021 அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு இயங்கும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.